Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 25.03.2026 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவண குமார்**

**தேதி : 25.03.2026 – புதன்கிழமை          நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

மேற்காசிய மோதலின் நீண்டகால தாக்கங்களை சமாளிக்க 7 அதிகாரமளிக்கப்பட்ட குழுக்களை அமைப்பதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

குஜராத்தில் சீரான சிவில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டதற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஆகாஷ்வாணி, நாளை முதல் தனது காலை ஒலிபரப்பைத் தொடங்குவதற்கு முன் தேசிய பாடலான வந்தே மாதரத்தின் முழு பதிப்பை ஒலிபரப்பவுள்ளது.

புதுச்சேரியில் தேர்தல் செலவினங்களை கண்காணிப்பதற்காக 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளதாக புதுச்சேரி மாவட்ட தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

*மோடி -1 (11)*

மேற்காசியா பிரச்சனை தொடர்பாக மத்திய அரசால் கூட்டப்பட்ட அனைத்துக்கட்சிக் கூட்டம் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்று வருகிறது. பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் பூரி, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர். காங்கிரஸ் தலைவர் திரு. முகுல் வாஸ்னிக் மற்றும் திரு. சாதிக் அன்வர், சிபிஐ எம்.பி. திரு. ஜான் பிரிட்டாஸ் மற்றும் சமாஜ்வாதி எம்.பி. திரு. தர்மேந்திர யாதவ் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

இது குறித்த கூடுதல் தகவல்கள்…

… வாய்ஸ் …

*மோடி வாய்ஸ் 2 (17)*

… வாய்ஸ் …

மேற்காசிய மோதலின் நீண்டகால தாக்கங்களை சமாளிக்க 7 அதிகாரமளிக்கப்பட்ட குழுக்களை அமைப்பதாக பிரதமர் திரு.நரேந்திர

மோடி அறிவித்துள்ளார். நேற்று மாநிலங்களவையில் பேசிய அவர், போரின் கடுமையான பக்க விளைவுகளைச் சுட்டிக்காட்டி, இந்த 7 அதிகாரமளிக்கப்பட்ட குழுக்கள், போரின் விளைவுகளான, எரிபொருள், உரங்கள், எரிவாயு, விநியோகச் சங்கிலி மற்றும் பணவீக்கம் ஆகியவற்றை கையாளும் என்று குறிப்பிட்டுள்ளார். மாநிலங்களவையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்டுவதற்கான ஒரே தீர்வு, பேச்சுவார்த்தை மட்டும் தான் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை பிரதமர் வலியுறுத்தினார். ஈரான், இஸ்ரேல், அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து தரப்பினருடனும், இந்தியா தொடர்ந்து தொடர்பில் இருப்பதாகவும், கச்சா எண்ணெய், எரிவாயு மற்றும் உரங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதில், இந்தியாவிற்கு தன்னம்பிக்கை மட்டுமே ஒரே வழி என்று கூறியுள்ளார். எந்தவொரு எதிர்மறையான சூழ்நிலையையும் எதிர்கொள்ள நாட்டு மக்கள் தயாராக இருக்குமாறு பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

*மோடி வாய்ஸ் -3 (08 )*

மேற்காசிய போர் உலக அளவில் கடுமையான எரிசக்தி நெருக்கடியை உருவாக்கியுள்ளது என்று கூறிய பிரதமர், கள்ளச் சந்தை

மற்றும் பதுக்கலைத் தடுக்குமாறு மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டார். தற்போது கிடைக்கக் கூடிய அனைத்து ஆதாரங்களிலிருந்தும் எரிவாயு மற்றும் கச்சா எண்ணெயை கொள்முதல் செய்ய அரசு முயற்சித்து வருவதாகவும், சாமானிய மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வரும் நாட்களிலும் முயற்சிகள் தொடரும் என்று பிரதமர் உறுதிபடக் கூறினார்.

*அமித்ஷா- (14)*

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, குஜராத் மாநில சட்டமன்றத்தில் **சீரான சிவில் சட்ட மசோதா** நிறைவேற்றப்பட்டதற்காக அம்மாநில முதலமைச்சர் திரு.பூபேந்திர படேலுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார். இம்மசோதாவிற்கு ஆதரவளித்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியான சட்டம் இருக்க வேண்டும் என்பதே பிஜேபி தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே அதன் உறுதியான நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது என்று அவர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் திரு.நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் பிஜேபி ஆளும் மாநில அரசுகள் இந்த திசையில் தொடர்ந்து முன்னேறி வருவதாகவும் அவர் கூறினார். மேலும், நாடு

என்பது திருப்திபடுத்தும் அரசியலின் அடிப்படையில் அல்லாமல் அனைத்து மக்களும் சமமான சட்டங்களின் மூலமே நிர்வகிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

*நிர்மலா சீதாராமன் (18)*

நிதி மசோதா 2026, மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா 2026-27 நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதி முன்மொழிவுகளை செயல்படுத்தும் என்றும், மத்திய அரசு கொண்டுவந்த திருத்தங்களுக்கு சபை ஒப்புதல் அளித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதி மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்த மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வேலைவாய்ப்பு உருவாக்கம், உற்பத்தி, சிறு-குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், விவசாயிகள் உள்ளிட்டவற்றிற்கு இந்த மசோதா அதிகாரமளித்து வருவதாக கூறினார். இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்ற டிஜிட்டல் உள்கட்டமைப்பு, மின்னணு உற்பத்தி, கடல்சார் பொருட்கள், கனிமங்கள் மற்றும் அணுசக்தி போன்ற முக்கியத் துறைகளுக்கும் மத்திய அரசு ஆதரவு அளித்து வருவதாக அவர் கூறினார். சீர்திருத்தங்கள் என்பது நிர்பந்தத்தால் நடைபெறுவது அல்ல என்றும், தெளிவு, அர்ப்பணிப்பு மற்றும் நம்பிக்கையுடன் நடைபெறுகின்றன என்றும் அவர் விளக்கமளித்தார்.

இந்த நிதிமசோதா நடுத்தர வர்க்கத்தை மையமாகக் கொண்டுள்ளது என்றும், உயிர் காக்கும் 17 முக்கிய மருந்துகளுக்கு அடிப்படை சுங்க வரியிலிருந்து மத்திய அரசு விலக்கு அளித்துள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

*நிர்மலா சீதாராமன் -2 (10)*

நிதி மசோதா 2026-27, ஐந்து தெளிவான கொள்கைகளை அடிப்படையாக கொண்டுள்ளது என்றும், நம்பிக்கை அடிப்படையிலான வரி நிர்வாகம், சாமானிய மக்களின் வாழ்க்கையை எளிதாக்குதல், சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், விவசாயிகள் மற்றும் கூட்டுறவுகளுக்கு அதிகாரமளித்தல் ஆகியவை இந்தியாவை உலகளாவிய வணிக மையமாக மாற்றக்கூடியது என்றும் தெரிவித்துள்ளார். இந்த மசோதா வரி செலுத்துவோரின் சிரமங்களை குறைப்பதில் கவனம் செலுத்துகிறது என்று கூறிய அவர், மேற்காசிய நெருக்கடி சவால்களைச் சமாளிக்கவும், அதன் தாக்கத்தைக் குறைக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினார்.

*வந்தே மாதரம் - (04)*

ஆகாஷ்வாணி நாளை முதல் தனது காலை ஒலிபரப்பைத் தொடங்குவதற்கு முன் தேசிய பாடலான வந்தே மாதரத்தின் முழு பதிப்பை ஒலிபரப்பவுள்ளது.

இது குறித்த கூடுதல் தகவல்கள்…

… வாய்ஸ் …

*வந்தே மாதரம் வாய்ஸ் - (17)*

… வாய்ஸ் …

சுதந்திரம் அடைந்ததிலிருந்து ஆகாஷ்வாணி நிலையங்கள் தங்களது காலை ஒலிபரப்பை அதன் அடையாள இசையுடன் தொடங்கி, அதைத் தொடர்ந்து வந்தே மாதரத்தின் இரண்டு பத்திகள் கொண்ட பதிப்பை ஒலிபரப்புவது ஒரு மரபாக இருந்து வருகிறது. தேசியப் பாடலில் ஆறு பத்திகள் இருக்க வேண்டும் என்பது குறித்த மத்திய உள்துறை அமைச்சகத்தின் சமீபத்திய வழிகாட்டுதலின்படி ஆகாஷ்வாணியின், அனைத்து நிலையங்களும் நாளை முதல் தேசியப் பாடலின் முழு பதிப்பை ஒலிபரப்பத் தொடங்கும் என்று மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. முழு பதிப்பின் கால அளவு 3 நிமிடங்கள் 10 விநாடிகள் ஆகும். முதலில் ஒலிபரப்பப்படவுள்ள இந்த பதிப்பை

புகழ்பெற்ற இந்தி,செவ்வியல் பாடகர் பண்டிட் சந்திரசேகர் வாசே, ராக தேஷில் பாடியுள்ளார். இந்த முழுமையான ஆறு பத்திகள் கொண்ட வந்தே மாதரம் பிராந்திய பதிப்புகளில் பதிவு செய்யப்பட்டு வருவதாக அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது. இந்த பதிப்புகள் அந்தந்த மாநிலங்களிலுள்ள ஆகாஷ்வாணி நிலையங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒலிபரப்பப்படவுள்ளது.

*புதுச்சேரி தேர்தல் அதிகாரி - (14 )*

புதுச்சேரி சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு முறையற்ற பணப்பரிமாற்றம் மற்றும தேர்தல் செலவினங்களை கண்காணிப்பதற்காக வருமான வரித்துறையின் புலனாய்வுப் பிரிவு சார்பில் பிரத்யேகமான 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது என்று புதுச்சேரி மாவட்ட தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார். அதன்படி எந்தவொரு தனி நபரோ அல்லது கட்சியோ வாக்காளர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ரொக்கம், பரிசுப்பொருட்கள் அல்லது இதர சலுகைகளை புதுச்சேரியில் விநியோகிப்பது குறித்த புகார்களை தெரிவிக்க, கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 1800 425 0026 மூலமாகவோ அல்லது

pdy.electioncomplaints2026@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ அல்லது 75989 81438 என்ற வாட்ஸ்அப் எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தகவல் அளிப்பவர் பற்றிய விவரங்கள் பாதுகாக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

*காரைக்கால் - (15 )*

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி காரைக்கால் மாவட்ட தேர்தல் துறை மற்றும் தேர்தல் துறையின் ஒரு அங்கமாக விளங்கும் ஸ்வீப் அமைப்பும் இணைந்து மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக இன்று காரைக்கால் மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி இஷிதா ராட்டியின் அறிவுறுத்தலின்படி காரைக்கால் மாவட்டத்தில் மக்கள் அதிகம் சேரும் இடமாகிய வங்கிகள் மற்றும் ஏடிஎம் மையங்களில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் அடங்கிய சுவரொட்டிகளை ஒட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இந்திய தேர்தல் துறையின் பொது மேற்பார்வையாளர் திரு. பாலா ஓம் பிரஜாபதி மற்றும் வங்கி மேலாளர்கள் முன்னிலையில் வாக்குப்பதிவை வலியுறுத்தும் ஓட்டுச் சீட்டுகள் ஒட்டப்பட்டன. காரைக்கால் மாவட்ட காவல்துறை

ஒருங்கிணைப்புடன் ஸ்வீப் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.தாமோதரன் மற்றும் உறுப்பினர்கள் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

*மேற்காசிய நிலவரம்- 1 (18)*

மேற்காசியாவில் உருவாகி வரும் சூழல் குறித்த, பிரதமர் திரு.நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இலங்கை அதிபருடன் பேசினார் என்று வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார். பதற்றத்தை தணித்தல், விரைவில் அமைதியை மீட்டெடுத்தல், ஹார்மூஸ் ஜலசந்தி திறந்தும் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றிற்கான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து பிரதமர் வலியுறுத்தினார். கப்பல் போக்குவரத்துப் பாதைகளைப் பாதுகாத்தல் மற்றும் இந்தியா இலங்கை ஒத்துழைப்பு உட்பட எரிசக்தி பாதுகாப்பில் ஒருங்கிணைப்பு ஆகியவை குறித்து தலைவர்களிடையே கலந்துரையாடல் நடைபெற்றது என்று திரு. ஜெய்ஸ்வால் கூறினார். நாட்டில் 26 கோடி டன் கச்சா எண்ணெயை சுத்திகரிக்கும் திறன் உள்ளது என்றும், வதந்திகளை நம்பவேண்டாம் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மேற்காசியாவின் அண்மை நிகழ்வுகள் குறித்த அமைச்சகங்களுக்கு இடையேயான விளக்கக் கூட்டத்தில் உரையாற்றிய

பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திருமதி சுஜாதா ஷர்மா, பெட்ரோல் டீசல் விலைகளில் எந்த உயர்வும் இல்லை என்று தெளிவுபடுத்தினார்.

*மேற்காசிய நிலவரம் - 2 (12)*

பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயு குறித்துப் பேசிய அவர், அனைத்து மாநிலங்களிலும், P.N.G. இணைப்புகள் தொடர்பான விண்ணப்பக் கட்டணங்கள் மற்றும் ஒப்புதல் காலக்கெடு முறைப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார். மேலும் இது தொடர்பாக கடந்த 25 நாட்களில் சுமார் 2.5 லட்சம் புதிய இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், 2.2 லட்சம் நுகர்வோர் எல்.பி.ஜி.லிருந்து பி.என்.ஜி.க்கு மாறியுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

மேற்காசிய நிலவரங்கள் குறித்து துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் சிறப்பு செயலாளர் திரு.ராஜேஷ் குமார் சின்ஹா கூறுகையில் கடந்த 24 மணி நேரத்தில் 50 இந்திய மாலுமிகள் தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று கூறினார். கப்பல் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

*குமாரசாமி - (14)*

இந்தியா, நிலையான எதிர்காலத்தை நோக்கி மாறிவருகிறது என்று மத்திய கனரக தொழில்கள் மற்றும் எஃகுத்துறை அமைச்சர் திரு. H.D. குமாரசாமி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் கனரக தொழில்கள் அமைச்சகத்தின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு தலைமையேற்று உரையாற்றிய அவர், வளர்ந்த இந்தியா-2047 என்ற இலக்கை நோக்கி இந்தியா உலகளாவிய உற்பத்தி சக்தியாக உருவாகி வருகிறது என்று தெரிவித்தார். உள்நாட்டுக் கண்டுபிடிப்புகள் மற்றும் பெரிய அளவிலான உற்பத்திகள் மூலம் உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் நாட்டை ஒரு முக்கியமான முனையமாக மாற்றுவதில் கவனம் செலுத்தி வருவதாக கூறினார். மேலும் இந்நிகழ்ச்சியில் Make in India – Make for the world என்ற தொலைநோக்குப் பார்வை குறித்தும் திரு. குமாரசாமி வலியுறுத்தினார். இக்கூட்டத்தில் கனரக தொழில்துறை அமைச்சக செயலாளர் திரு. கம்ரான் ரிஸ்வி, நிதி ஆயோக் திட்ட இயக்குநர் டாக்டர் அன்ஷூ பரத்வாஜ் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மேற்காசிய மோதலின் நீண்டகால தாக்கங்களை சமாளிக்க 7 அதிகாரமளிக்கப்பட்ட குழுக்களை அமைப்பதாக பிரதமர் திரு.நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

குஜராத்தில் சீரான சிவில் சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டதற்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஆகாஷ்வாணி, நாளை முதல் தனது காலை ஒலிபரப்பைத் தொடங்குவதற்கு முன் தேசிய பாடலான வந்தே மாதரத்தின் முழு பதிப்பை ஒலிபரப்பவுள்ளது.

புதுச்சேரியில் தேர்தல் செலவினங்களை கண்காணிப்பதற்காக 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளதாக புதுச்சேரி மாவட்ட தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**